

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கடலூர், திருப்பாதிரிப்புலியர் புனித வளனார் மேல்நிலைப் பள்ளி அரங்கத்தில் நேற்று (09.02.2024) நடைபெற்ற கலைஞர் பண்பாட்டுப் பாசறை விழாவில் "பண்பாட்டுத் தலைவர் நூற்றாண்டில் கலைஞர் என்ற தலைப்பில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பயணங்களில் பல்வேறு பரிமாணங்களை தொகுத்த கலைஞர் பண்பாட்டுப் பாசறை விழா சிறப்பு மலரினை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் வெளியிட்டனர். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர்.க.மணிவாசன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர்.அஅருண் தம்புராஜ், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி.சுந்தரிராஜா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம் , துணை மேயர் பா.தாமரைச்செல்வன், விழாக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நடுக்குத்தகை ஊராட்சியில் பகல் நேரம் பராமரிப்பு மையத்தில் 100 பயனாளிகளுக்கு முன்னாள் அமைச்சர் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கட்டில் புடவை உள்ளிட்ட நிவாரண தொகுப்புகள் மையம் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி.தேசிங்கு, மாவட்ட நிர்வாகிகள் மா.ராஜ், எஸ் ஜெயபாலன், பா.நரேஷ்குமார், சே.பிரேம் ஆனந்த், ஜி.விமல்வர்ஷன், ஒன்றிய குழு துணை தலைவர் பரமேஸ்வரி கந்தன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி ராஜேஷ், கவுன்சிலர் யமுனா ரமேஷ், கே.சுரேஷ், ஊராட்சி மன்ற தலைவர் என்.லட்சுமி, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் பொறியாளர் எம்.மோகன், வழக்கறிஞர் பெ.வினோத், புனித்ராஜ் உதயா, ஜெ.சாக்ரடீஸ், பா.கந்தன், எம்.குணசேகரன், இ.ஏ.சந்திரன், ராதாகிருஷ்ணன், ஹரிபாபு, ரமேஷ், சிவாசேகர், சாந்தகுமாரி, நவமணி உள்பட பலர் உள்ளனர் .

### சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும

# திட்ட அனுமதி விண்ணப்பங்கள் இரண்டு மடங்காக உயர்வு!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, பிப்.10-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழி காட்டுதலின்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் திட்ட அனுமதி விண்ணப்பங்கள் இணையவழி மூலமே பெறப்படுவதால் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது மற்றும் பிற இணையவழி சேவைகளும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது என அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழி காட்டுதலின்படி செயல்படும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (CMDA) இணையவழி சேவையில் பெரும் வளர்ச்சியை கண்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஒற்றை சாளரமுறை அடிப்படையில் இணையவழி (Single Window Online Planning Permission Application System) திட்ட அனுமதி மென்பொருளை உருவாக்கி, மே மாதம் 2022-ஆம் ஆண்டு முதல் பொது மக்கள் பயன்பாட்டிற்கு செயல்படுத்தப் பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும மனைப் பிரிவிற்கான திட்ட அனுமதி இணையவழி சேவை, இணையவழி திட்ட அனுமதி பயிற்சி காணொளி, திட்ட அனுமதி மென்பொருள் தடையில்லா சான்றிதழ் வழங்கும் 12 துறைகளான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL), பொதுப்பணித்துறை (PWD), நீர்வள ஆதாரத்துறை (WRD), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (TNHB), எல்காட் நிறுவனம் (ELCOT), வனத்துறை (Forest), புவியியல் மற்றும் சுரங்கத் துறை (Geology & Mines), சிட்கோ (SIDCO), நெடுஞ்சாலைத் துறை (State Highways), தெற்கு ரயில்வே (Southern Railway), மாவட்ட நிர்வாகம் (Collectorates) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை (DFRS) ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, கூர்ந்தாய்வு செய்யப்படும் திட்ட அனுமதி சேவைகள் 17.11.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் திட்ட அனுமதி மென்பொருள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான பெருநகர சென்னை மாநகராட்சி (GCC) & நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (DMA) மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (RDPR) & பேரூராட்சிகள் இயக்ககம் (DTP) ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழி காட்டுதலின்படி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் பதிவு செய்யப்பட்ட கட்டிட வல்லுநர்கள், கட்டிடப் பொறியாளர்கள் மற்றும் அபிவிருத்தியாளர்கள் ஆகியவர்களுக்கு இணையதள திட்ட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பிப்பது, கையாளுவது சம்பந்தமாக மேம்படுத்தப்பட்ட மென்பொருள் மூலம் பல்வேறு பயிற்சிகள் நடத்தப்பட்டு, இந்த அமைப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட பல்வேறு நேர்முக பயிற்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இணையவழியில் திட்ட அனுமதி வழங்கப்படுவதால் விண்ணப்பங்கள் விரைவாக முடிக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் இணையவழியில் பெறப்பட்டு, வரலாறு காணாத வகையில் 30 நாட்களுக்குள் திட்ட அனுமதி வழங்கப்பட்டவை 114 ஆகும். இது திட்ட அனுமதி வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு ஆகும். திட்ட அனுமதி விண்ணப்பங்கள் அனைத்தும் இணையவழி மூலமே பெறப்பட்டு கூர்ந்தாய்வு செய்து ஒப்புதல் வழங்கும் முறை செயல்பாட்டிற்கு வந்தபின், விண்ணப்பங்களின் எண்ணிக்கை 27%-ஆக உயர்ந்துள்ளது மற்றும் இணையவழி ஒப்புதல் வழங்கியது 22%-ஆக உயர்ந்துள்ளது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் உயரமான கட்டடங்களுக்கு (HRB) வழங்கப்படும் திட்ட அனுமதி பொறுத்தவரையில் சராசரியாக ஒரு வருடத்திற்கு 65 விண்ணப்பங்கள் பெறப்படும். இணையவழி திட்ட அனுமதி மென்பொருள் செயல்பாட்டிற்கு வந்த பிறகு, 135 விண்ணப்பங்கள் பெறப்பட்டு கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. குறிப்பாக முன்பு எப்போதும் இல்லாத எண்ணிக்கையில் 100-க்கும் மேற்பட்ட உயரமான கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல உயரம் அல்லாத கட்டடங்களுக்கான (NHRB) திட்ட அனுமதி விண்ணப்பங்கள் 2022-ஆம் ஆண்டு 641 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 455 திட்ட அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2023-ஆம் ஆண்டு 837 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 605 திட்ட அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இணையவழி மூலம் பெறப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை 29%- ஆகவும் மற்றும் திட்ட அனுமதி ஒப்புதல் வழங்கிய எண்ணிக்கை 24%-ஆக உயர்ந்துள்ளது.

மேலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் இணையவழி திட்ட அனுமதி விண்ணப்பங்களுக்கான மென்பொருளில் தற்போதுள்ள செயல்முறையை (work-flow) எளிமையாக்கரீ-இன்ஜினியரிங் (Re-Engineering) செய்ய உத்தேசித்துள்ளது. இதன் மூலம், திட்ட அனுமதி வழங்குவதற்கான கால அளவு 60-லிருந்து 30-ஆக குறையும், திட்ட அனுமதி வழங்கப்படும் எண்ணிக்கையும் உயரும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும ஆன்லைன் போர்ட்டல் விண்ணப்பதாரர்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இனி வரும் காலங்களில் அனைத்தும் இணையவழி மூலம் செயல்படும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி செயல்படும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (CMDA) பெரும் வளர்ச்சியை கண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் என சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

### சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

# தி.மு.க. இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு தீர்மான விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை, பிப். 10 -

சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் இரண்டாவது இளைஞர் அணி மாநில மாநாடு தீர்மான விளக்க தெருமுனைக் கூட்டங்கள் (முதற்கட்ட பட்டியல்) நடைபெறும் விவரம் வருமாறு:-

14.2.2024 - புதன்கிழமை, வேளச்சேரி மேற்குப் பகுதி, 177 (அ) வட்டத்தில் வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராகுல் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தலைமை கழக பேச்சாளர் தக்கோலம் தேவபாலன் சிறப்புரையிலும்,

15.2.2024 - வியாழக்கிழமை, மதுரவாயல் தெற்கு பகுதி, 148 வது வட்டத்தில் ஆர். தியாகராஜன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தக்கோலம் தேவபாலன் சிறப்புரையிலும், 15.2.2024 - வியாழக்கிழமை, விருகம்பாக்கம் தெற்கு பகுதி, 138 (அ) வட்டத்தில் சேலம் சுஜாதா சிறப்புரையிலும், 16.2.2024 - வெள்ளிக்கிழமை, வேளச்சேரி மேற்கு பகுதி, 178 வது வட்டத்தில் பகுதி துணை அமைப்பாளர் வி.சண்முகநாதன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் சைதை சாதிக் சிறப்புரையிலும், 16.2.2024 - வெள்ளிக்கிழமை, புனித தோமையார் மலை தெற்கு ஒன்றியத்தில் ஒன்றிய துணை அமைப்பாளர் ஓ.கே.சதீஷ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தலைமை கழக பேச்சாளர் அ.ச.பெரு நற்கிள்ளிசிறப்புரையிலும்,

17.2.2024 - சனிக்கிழமை, மதுரவாயல் வடக்கு பகுதி, 92 வது வட்டத்தில் பகுதி அமைப்பாளர் எம்.பி.நவராஜ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தலைமை கழக பேச்சாளர் அ.ச.பெரு நற்கிள்ளி சிறப்புரையிலும், 17.2.2024 - சனிக்கிழமை, சைதை கிழக்கு பகுதி, 168 (அ) வட்டத்தில் கொடி பாலா நிகழ்ச்சி ஏற்பாட்டில் திராவிட இயக்க தமிழர் பேரவை துணை பொதுச் செயலாளர் தோழர் இரா. உமா சிறப்புரையிலும்,

18.2.2024 - ஞாயிற்றுக் கிழமை, மதுரவாயல் தெற்கு பகுதி, 154 வது வட்டத்தில் மாவட்ட துணை அமைப்பாளர் ராமாபுரம் செ.ரவி நிகழ்ச்சி ஏற்பாட்டில் தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக் சிறப்புரையிலும், 19.2.2024 - திங்கட்கிழமை, வேளச்சேரி கிழக்கு பகுதியில் பகுதி அமைப்பாளர் ஆர்.கே.சந்திரேஷ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் டான் அசோக் சிறப்புரையிலும், 19.2.2024 - திங்கட்கிழமை, சைதை கிழக்கு பகுதி, 172 (அ) வட்டத்தில் வட்ட அமைப்பாளர் தி.கோகுலன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் ஆவடி பாஸ்கர் சிறப்புரையிலும், 20.2.2024 - செவ்வாய்க்கிழமை, சைதை மேற்கு பகுதி, 142 வது வட்டத்தில் மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் திராவிட கழகம் துணை பொதுச் செயலாளர் சே.மெ.மதிவதனி சிறப்புரையிலும், 20.2.2024 - செவ்வாய்க்கிழமை, சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி, 192 வது வட்டத்தில் பகுதி துணை அமைப்பாளர் இ.ரா.நாகேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் சென்னை அரங்கநாதன் சிறப்புரையிலும்,

21.2.2024 - புதன்கிழமை, வேளச்சேரி மேற்குப் பகுதி, 175 (அ) வட்டத்தில் கே.தனசேகர் நிகழ்ச்சி ஏற்பாட்டில் கந்திலி கரிகாலன் சிறப்புரையிலும், 21.2.2024 - புதன்கிழமை, மதுரவாயல் தெற்கு பகுதி, 151 வது வட்டத்தில் மாவட்ட துணை அமைப்பாளர் ச.சங்கர் கணேஷ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நாத்திகம் நாகராஜன் சிறப்புரையிலும், 22.2.2024 - வியாழக்கிழமை, சைதை மேற்கு பகுதி, 139 (அ) வட்டத்தில் ஜிம்.க.பிரபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் மருத்துவர் யாழினி சிறப்புரையிலும், 22.2.2024 - வியாழக்கிழமை, விருகம்பாக்கம் வடக்கு பகுதி, 127 வது வட்டத்தில் பகுதி துணை அமைப்பாளர் பொன்.சேகர் நிகழ்ச்சி ஏற்பாட்டில் கந்திலி கரிகாலன் சிறப்புரையிலும்,

23.2.2024 - வெள்ளிக்கிழமை, வில்லிவாக்கம் ஒன்றியம், ஒன்றிய அமைப்பாளர் ஆர்.வினோத் நிகழ்ச்சி ஏற்பாட்டில் சூர்யா கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையிலும், 24.2.2024 - சனிக்கிழமை, சோழிங்கநல்லூர் மத்திய பகுதி, 189 வது வட்டத்தில் பகுதி துணை அமைப்பாளர் கே.பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் சைதை சாதிக் சிறப்புரையிலும், 24.2.2024 - சனிக்கிழமை, சைதை கிழக்கு பகுதி, 170 வது வட்டத்தில் மாவட்ட துணை அமைப்பாளர் கோட்டூர் பிரகாஷ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் அரசு தலைமை கொறடா கோவி.செழியன் சிறப்புரையிலும் முதற்கட்ட தெருமுனைக் கூட்டங்கள் நடைபெறுகிறது.

இவ்வாறு சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, 146 வது வார்டு மாமன்ற உறுப்பினர் (நினைவில் வாழும்) ஆலப்பாக்கம் கு.சண்முகம் அவர்களின் வார்டு (2022–2023 ஆண்டு) நிதியிலிருந்து ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டடத்தினை மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், பகுதி துணைச் செயலாளர் தீ.பாலாஜி, வட்டக் கழகச் செயலாளர் மதுரவாயல் எம்.ரூபன், மாவட்ட துணை அமைப்பாளர் தினகரன் சண்முகம், மாவட்டப் பிரதிநிதி பி.சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


